10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 01 அதிர்வு 243 திங்கட்கிழமை ஜனவரி 22 2018 ethirolimedia@gmail.com 021 224 38 18 / 021 300 48 48



## பொலிஸ் கீதம் தமிழிலும் 150 வருடங்களின் பின் மாற்றம்

வவுனியா, ஜன. 22

பொலிஸ் கீதம் தமிழில் மொழியாக்கம் செய்து பாடப்பட்டு இறுவட்டாகவும் வெளியிடப்பட்டுள்ளது.

பொலிஸ் கீதம் இயற்றப்பட்டு 150 ஆண்டுகளின் பின்னர் இந்த மாற்றம் இடம்பெற்றுள்ளது. தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டு பாடப்பட்ட இறுவட்டு வெளியீடு நேற்று வவுனியா பொலிஸ் மா

06▶

## மூடப்பட்டது அமெரிக்க மையம்

கொழும்பு, ஜன. 22

கொழும்பில் உள்ள அமெரிக்க மையம் மறு அறிவித்தல்வரை தற்காலிகமாக மூடப்படுவதாக கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகம் அறிவித்துள்ளது.

அமெரிக்க அரசாங்கத்தின் குறுங்கால வரவு - செலவுத் திட்டத்துக்கு, அமெரிக்க செனட் உறுப்பினர்கள் அங்கீகாரம் அளிக்க மறுத்துள்ளனர். இதனால் அமெரிக்காவின் பெரும்பாலான அரச பணியகங்கள் மூடப்படுகின்றன. பென்டகன் மற்றும் ஏனைய சில சமஷ்டி முகவர் அமைப்புகளுக்கான நிதி ஒதுக்கீடுகளுக்கு, செனட்டின், குடியரசு மற்றும் ஜனநாயக கட்சி உறுப்பினர்கள் அங்கீகாரம் அளிக்க மறுத்து வருகின்றனர்.

06▶

## கதிர்காமம் சூட்டுச் சம்பவம் இரகசிய பொலிஸ் விசாரணை

அம்பாந்தோட்டை, ஜன. 22

கதிர்காமத்தில் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டால் ஏற்பட்ட மரணம் குறித்து விசாரிக்க இரகசிய பொலிஸ் குழு அமைக்கப்பட்டுள்ளது.

கதிர்காமத்தில் நேற்று முன்தினம் இரவு பொலிஸாரின் எச்சரிக்கையை மீறிச் சென்றவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இந்தச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

இதையடுத்து அங்கு பதற்ற நிலை ஏற்பட்டது. பொலிஸ் நிலையத்தை சுற்றி வளைத்த மக்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதையடுத்தே இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை நடத்த இரகசியப் பொலிஸ் குழு ஒன்றை பொலிஸ் மா அதிபர் அமைத்துள்ளார்.

மேலும், எதிர்ப்பு நடவடிக்கையில்

06▶

# பதவி விலகினார் முதலமைச்சர்



கொழும்பு, ஜன. 22


அதிபரை முழந்தாழிடச் செய்த குற்றச்சாட்டால் ஊவா மாகாண முதலமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க நேற்று பதவி விலகினார்.

மாகாண சபையில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தனது பதவி விலகல் குறித்து அவர் அறிவித்தார்.

“என் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுத் தொடர்பில் பக்கச்சார்பற்ற வகையில் விசாரணைகளை நடத்துமாறு பொலிஸ்மா அதிபர், ஊவா மாகாண ஆளுநரைக்

06▶

# பெரும் இன அழிப்பு வடக்கு, கிழக்கில் நடக்கிறது



யாழ்ப்பாணம், ஜன. 22

“எமது நிலங்கள், மொழி, கலாசாரம், பாரம்பரியம், மதஸ்தலங்கள் பறிபோகப் போகின்றன என்று நாம் படபடத்துக் கொண்டிருக்கிறோம். பாரிய இன அழிப்பு ஒன்று வடக்கு, கிழக்கில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது” - என முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தன்னிடம் கேட்கப்படும் கேள்விகளில் ஒன்றைத் தெரிந்து வாரம் ஒருமுறை அதற்குப் பதிலளித்து வருகிறார்.

இந்த வாரம் “தமிழ்க் கட்சிகள், ஏன்

06▶

## தனியாக வசித்த மூதாட்டி அடித்துப் படுகொலை



மானிப்பாய், ஜன. 22

தனிமையில் வசித்த மூதாட்டி ஒருவர் அடிகாயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவர் அணிந்திருந்த நகைகள் இல்லாமையால், நகைக்காகவே இக்கொலை இடம்பெற்றிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

06▶

## ரவி கருணாநாயக்கவை கைது செய்ய நடவடிக்கை?

கொழும்பு, ஜன. 22

முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவை கைது செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மத்திய வங்கி பிணைமுறி மோசடி விசாரணை ஜனாதிபதி ஆணைக் குழுவின் அறிக்கையின்

06▶

# மணிவண்ணனிடம் பொலிஸார் விசாரணை



யாழ்ப்பாணம், ஜன. 22

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அமைப்பாளரும் அக்கட்சியின் யாழ். மாநகர முதல்வர் வேட்பாளருமான வி.மணிவண்ணன் நேற்று பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர்களுள் ஒருவரான ரட்ணஜீவன் கூலின் முறைப்பாடு தொடர்பிலேயே மணிவண்ணன் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டு, அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டதாகத் தெரிகிறது.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியாகப் போட்டியிடும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின்

06▶

# இரண்டு கோடி ரூபா வாங்கியதை உறுதிப்படுத்துவாரா சிவசக்தி எம்.பி.?

## இப்படிக் கேட்கிறார் சிறிதரன் எம்.பி.!



அரசாங்கத்திடம் இரண்டு கோடி ரூபா வாங்கியதை சிவசக்தி ஆனந்தன் எம்.பி. ஆதாரத்துடன் உறுதிப்படுத்த முடியுமா? எனக் கேட்டுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன்.

வட்டக்கச்சி பொதுச் சந்தையில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசும் போதே மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

“தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்

06▶

உங்களுடைய இலக்கங்களை எங்களுக்கு வழங்குங்கள்

உங்களுடைய வியாபாரத்துடன் வாடிக்கையாளர்களை தொடர்புபடுத்துவோம்



பல்வேறு வழிகளில் உங்களின் தகவல்களை அனுப்பலாம்

- த.பெ.எண் 2333 கொழும்பு முகவரிக்கு தபால் அட்டை அனுப்பவும்.
- இ-மெயில் info@rainbowpages.lk
- rainbowpages.lk சென்று Register your business இல் பதிவு செய்யவும்.
- 0712399399 இலக்கத்துக்கு sms,viber or whatsapp இற்கு மெசேஜ் பண்ணவும்
- விபரங்களை 011 2391888 பெக்ஸ் செய்யவும்.

SLT
ரெயின்போ பேஜஸில்
இலவசமாக பதிவு
செய்து வியாபாரத்தை
விரிவுபடுத்துங்கள்.

SLT RAINBOW PAGES
Print & Digital Directories

உங்களின் வளமான வியாபாரத்திற்கு கைகொடுக்கும் SLT ரெலிகொம்.

# 50 மாணவர்களுக்கு 5 வருடப் புலமைப்பரிசில்







யாழ்ப்பாணம், ஜன.22

யாழ்.பாதுகாப்புப் படைத்தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாரச்சியின் ஏற்பாட்டில், இங்கிலாந்தின் "ஹவுன்ஸ்லோ" நிறுவனமும், இலங்கையின் "ஜனஹட" நிறுவனமும் இணைந்து, யாழ்.மாவட்டத்தில் குறைந்த வருமானத்தைப் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த 50 மாணவர்களுக்கு 5 வருடங்களுக்கான கல்விப் புலமைப்பரிசிலை வழங்கின.

இந்த நிகழ்வு, யாழ்.பாதுகாப்புப் படைத்தலைமையகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதில் யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகம், யாழ்.பாதுகாப்புப் படைத்தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாரச்சி, பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் உட்பட பலர் பங்குபற்றினர். (அ)

# சிவனொளிபாத மலைக்கு கஞ்சா கடத்தியோர் கைது



ஹட்டன், ஜன.22

நாட்டில் பல்வேறு பிரதேசங்களிலிருந்தும் 5.7 கிலோகிராம் கஞ்சாவை சிவனொளிபாதமலைக்கு எடுத்துச் சென்ற 22 பேர் ஹட்டன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹட்டன் விசேட குற்றத்தடுப்புப் பிரிவினர் மோப்ப நாயின் உதவியுடன் நடத்திய திடீர்த் தேடுதல் நடவடிக்கையின் போதே இவர்கள் பொலிஸாரிடம் பிடிபட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் அவிசாவளை, பாதுக்க, ஹங்வெல்ல உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும், சந்தேக நபர்கள் ஹட்டன் நீதவான் முன்னிலையில் நேற்று ஆஜர் செய்யப்பட்டனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)



# குளிர்பானத்துக்குள் கழிவுப் பொருட்கள்

வவுனியா, ஜன.22

வவுனியாவில் குளிர்பானம் ஒன்றுக்குள் இருந்து கழிவுப் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற திருமண நிகழ்வு ஒன்றில் வந்திருந்தவர்களுக்கு குளிர்பானம் வழங்கும்போதே இளைஞர்கள் இதை அவதானித்துள்ளனர்.

அடைக்கப்பட்ட குளிர்பானப் போத்தல் ஒன்றுக்குள்ளேயே குறித்த கழிவுகள் கண்டுபிடிக்கப்பட்டன. ஒரு பிரபல நிறுவனத்தின் குளிர்பானமே இவ்வாறு கழிவுகளுடன் விற்பனைக்கு விடப்பட்டுள்ளது.

"அடைக்கப்பட்ட போத்தலில் கழிவுப் பொருட்கள் எவ்வாறு உட்செல்ல முடியும்? அப்படியாயின் குளிர்பானம் அடைக்கும் போத்தல் சுத்தப்படுத்தப்படவில்லை. இவ்வாறானவர்களுக்கு எதிராக நுகர்வோர் பாதுகாப்புச்சட்டத்தினூடாக நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்" என அங்கு வந்திருந்தவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (அ)

# மக்களின் பிரச்சினைகள் பற்றி கூட்டமைப்புக்கு அக்கறையில்லை

## டக்ளஸ் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜன.22

தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு மக்களின் பிரச்சினைகளை தீர்த்துவைப்பதில் அக்கறையோ ஆற்றலோ கிடையாது. ஆயினும் நாடாளுமன்ற ஜனநாயகத்துக்கூடாகத்தான் எமது மக்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாணமுடியும் என்ற நம்பிக்கையில்தான் இற்றைவரை எமது அரசியல் பயணத்தை முன்னெடுத்து வருகின்றோம் என ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வவுனியா தரணிக்குளம் பகுதியில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். ஒரு காலகட்டத்தில் ஆயுதப் போராட்டத்துக்கான தேவை இருந்தது என்பது உண்மைதான். ஆயினும் அதன் பின்னர் இலங்கை - இந்திய ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட்டதனூடாக ஜனநாயக வழிமுறையை நாம் தேர்ந்தெடுத்து அதன் வழியில் பயணித்துக் கொண்டிருக்கின்றோம்.

ஆனால் ஆயுத வழிமுறை மூலம்தான் தீர்வுகாணலாம் என்று கூறியர்களின் நிலை குறித்து மக்கள் நன்கறிவார்கள்.

எனவே இன்று எமது வழிமுறையே சரி என்பதை எமது மக்களும் சக அரசியல் தலைமைகளும் தென்னிலங்கை அரசியல் தலைமைகளும் மட்டுமன்றி சர்வதேசமும் ஏற்றுக்கொண்டுள்ளது.

சக அரசியல் கட்சிகள் எமது வழிமுறைக்கு வந்திருந்தாலும் கூட எமது பொறிமுறைக்கு வராத ஒரு அவலம் இற்றைவரை தொடர்கின்றது. சக தமிழ் கட்சிகளுக்கு குறிப்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதில் அக்கறையோ ஆற்றலோ கிடையாது.

அதுமாத்திரமன்றி மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டால் தமது அரசியல் இருப்பு கேள்விக்குறியாகிவிடும் என்றும் அவர்கள் கருதுகின்றார்கள். ஆனால் நாம் அதிலிருந்து மாறுபட்டவர்களாக இருப்பதுடன் எமது மக்கள் எதிர்கொள்ளும் சகல பிரச்சினைகளுக்கும் உரிய தீர்வுகள் காணப்படவேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகவும் உள்ளது" என்றும் அவர் தெரிவித்தார். (அ)


# சைவப்புலவர் பரீட்சை வழிகாட்டல் அறிமுகம்

யாழ்ப்பாணம், ஜன.22

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தினால் நடத்தப்படவுள்ள 2018 ஆம் ஆண்டுக்கான சைவப்புலவர் மற்றும் இளஞ்சைவப்புலவர் பரீட்சைக்கு தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கான வழிகாட்டல் அறிமுக நிகழ்வு யாழ்ப்பாணம் வண்ணை. நாவலர் மகா வித்தியாலயத்தில் எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இவ் வழிகாட்டல் அறிமுக நிகழ்வில், பரீட்சைக்கு விண்ணப்பித்த அனைத்துப் பரீட்சார்த்திகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கச் செயலாளர் சைவப் புலவர் எஸ்.ரி.குமரன் அறிவித்துள்ளார்.

அத்துடன் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் வகுப்புக்கள் பிரதி சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் மாலை 1 மணி வரை மேற்குறித்த பாடசாலையில் இடம்பெறவுள்ளது. (அ)




# ஒவ்வொரு இரவும் ஒவ்வொரு கிறுக்கன்


அரசியலுக்கு வந்தாலே பொறுப்புக்களும் தொல்லைகளும் அதிகம்தான். தம்மை அரசியலுக்குக் கொண்டு வந்த மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நேரம், காலம் பார்க்காமல் களத்தில் இறங்க வேண்டும்.

இவ்வாறு களத்தில் இறங்கும்போது தேவையற்ற அசௌகரிகங்களுக்கெல்லாம் முகம் கொடுக்க வேண்டி வரும். இப்படித்தான் நமது அமைச்சர் தயாசிறி ஜயசேகர ஒவ்வொரு இரவும் ஒரு வகையான தலையிடியை எதிர்நோக்கி வருகின்றாராம்.

அது என்ன தலையிடி தெரியுமா? அவர் மக்கள் பிரதிநிதி என்பதால் யார் தொலைபேசி அழைப்புகளை எடுத்தாலும் அவற்றுக்கு பதில் வழங்குவாராம். பதில் வழங்க முடியாமல் போனால் அந்த இலக்கங்களை பார்த்து அமைச்சரே அழைப்புகளை மேற்கொள்வாராம். இப்படிப்பட்ட ஆள் இவ்வாறான சந்தர்ப்பங்களில் சில கிறுக்கர்களிடம்-குடிகாரர்களிடம் - அநியாயமாகச் சிக்கிக்கொள்கிறாராம்.

ஆம். இரவில் போதையில் மிதக்கும் குடிமகன்கள் பொழுதுபோக்குக்காக செய்யும் சேட்டைக்குள் அமைச்சர் சிக்கிவிடுகின்றாராம். அவர்கள் நடுநிசியில் அமைச்சருக்கு அழைப்புக்களை எடுக்கும்போது ஏதோ முக்கியமான அழைப்பாக இருக்கும் என நினைத்து அடித்துப் பிடித்துக்கொண்டு அந்த அழைப்புகளுக்கு காது கொடுத்தால் தமது குடும்பப் பிரச்சினைகள், நண்பர்களுடனான பிரச்சினைகள் மற்றும் தொழில் பிரச்சினைகள் என ஏகப்பட்ட பிரச்சனைகளை அமைச்சரிடம் முறைப்பாடு செய்கின்றனராம் அந்தக்குடிகாரர்கள்.

இதனால் செய்வதறியாது தவிக்கும் அமைச்சர், "இன்றைக்கு எந்தக் கிறுக்கன் கையில் சிக்கப் போகின்றேனோ?" என்ற பயத்தோடுதான் ஒவ்வொரு இரவையும் கழிக்கிறாராம்.



எதிரொலி Ethiroli
திங்கள், 22 ஜனவரி 2018 ethirolimedia@gmail.com

## ரெடிமேட் மனிதம்

முல்லைத்தீவில், வறுமையின் பிடியில் வாழ்ந்த ஒரு குடும்பத்துக்குப் பொலிஸார் புதிய வீடொன்றைத் தங்கள் நிதியில் கட்டிக் கொடுத்துள்ளனர். அதேபோன்று வன்னியில் பல பகுதிகளில் படையினர் பாடசாலைகளைத் துப்புரவு செய்வது, மக்களின் வீடுகளைப் புனரமைத்துக் கொடுப்பது, கலை நிகழ்ச்சிகளை நடத்துவது என்று போருக்கு முந்திய இராணுவம் பற்றிய மதிப்பீடுகளை மாற்ற , தலைகீழாக நிற்கிறார்கள்.

யாழ்ப்பாணத்திலும் நேற்று ஒரு நிகழ்வு நடந்தது. இரு நிறுவனங்களின் ஏற்பாட்டில் வறுமைக் கோட்டுக்குட்பட்ட 50 மாணவர்களுக்கு வருடாந்தம் 5 ஆயிரம் ரூபா படி 5 வருடங்களுக்கான புலமைப்பரிசில் வழங்கப்பட்டுள்ளது. கடந்த மாதம் யாழ்.முற்றவெளில் உணவுத் திருவிழாவும் படையினரால் நடத்தப்பட்டது. இதைவிட ஒவ்வொரு படைப் பிரிவும் அடிக்கடி குருதிக்கொடைகளிலும் ஈடுபடுகின்றன. இவையும் படைகள் தங்கள் முகத்தை மாற்றிக் கொண்டு, மக்களின் மனதில் இடம்பிடிக்க செய்வதற்கான எத்தனங்களே.


இப்படியான உதவிகள் மக்களுக்கு கிடைப்பது நல்ல விடயங்களே. தமிழ் அரசியல்வாதிகள் செய்ய மறந்து போன மக்களுக்கான உதவிகளை, படையினரும், பொலிஸாரும் செய்வதை தடுக்கும் உரிமை எவருக்கும் இல்லை. யார் குற்றியாவது அரிசியானல் சரி. ஆனால் அப்படி 'ஊரா வீட்டு உரலில், கிடக்கும் நெல்லை இப்படி பாடுபட்டுக் குற்றி' மக்களிடத்தே நல்லபிள்ளை பெயரை வாங்க எதற்காகப் படைத்தரப்பு முயல்கிறது?

அதற்குக் காரணம் இருக்கிறது. மார்ச் மாதம் ஜெனீவாவில், மீண்டும் இலங்கை விவகாரம் கிளறப்படப்போகின்றது. கடந்த கால அமர்வுகளில் தலையைச் சொறிந்தபடி "நல்லிணக்கத்துக்கு இன்னும் கொஞ்சக் காலம் தேவை" என்று கெஞ்சியதைப் போலவே இம்முறையும் இலங்கை கெஞ்சப்போகின்றது. அப்படிக் கெஞ்சும்போது, 'கடந்த முறை சொன்ன விடயங்களில் எதையெல்லாம் புடுங்கியிருக்கிறீர்கள்?' என சர்வதேச நாடுகள் நாக்கைப் பிடுங்குகிற மாதிரிக் கேட்கும் போது அதற்குப் பதிலளிக்க சில நொண்டிச் சாட்டுக்கள் அரசுக்குத் தேவை. முன்னைய ஜெனீவா மனித உரிமை அமர்வுகளின் போது, விதிக்கப்பட்ட நிபந்தனைகளில் முக்கியமானது, 'தமிழ் மக்களின் பிரதேசத்தில் உள்ள இராணுவப் பிரசன்னத்தைக் குறைத்தல்' என்பது. ஆனால் அதை எந்தவொரு காலத்திலும் அரசு செய்யப்போவதில்லை. முக்கியமற்ற தளங்களைக் கைவிடுதல், தேவையற்ற காணிகளைத் திருப்பிக் கொடுத்தல் என்பவற்றை அரசு செய்யுமே தவிர, ஒரு போதும் இராணுவத்தைக் குறைப்புச் செய்யாது. அப்படிச் செய்தால், தென்னிலங்கையில் இதற்காகவே காத்திருக்கும் மகிந்த அணியினர் "வடக்கு, கிழக்கில் இராணுவத்தை விலக்கி," தமிழீழத்தைக் கொடுத்துவிட்டது நல்லாட்சி அரசு" என்று கூப்பாடு போட்டுக் கூட்டம் சேர்க்கத் தொடங்கி விடுவார்கள். அதன் பிறகு தேர்தலில் வெற்றி என்பதை நல்லாட்சி அரசில் அங்கம் வகிப்போர் மறந்து விடவேண்டியதுதான். எனவே வடக்கு, கிழக்கில் படைக் குறைப்பு என்ற ஒன்றை எக்காலத்திலும் எந்த அரசாங்கம் பதவிக்கு வந்தாலும் செய்யப்போவதில்லை.

எனவே, சர்வதேசத்தின் கேள்விக்கணையைச் சமாளிக்க இன்னொரு யுக்தியை அரசு பிரயோகிக்க நினைக்கிறது. 'படையினர் தம்மோடு இருக்க வேண்டுமென வடக்கு, கிழக்கு மக்கள் விரும்புகிறார்கள். படையினரும் மக்களின் வாழ்வை மேம்படுத்தும் திட்டங்களை முன்னெடுத்து நல்லிணக்கத்தை ஏற்படுத்துகிறார்கள். அப்படிப்பட்ட நிலையில் படையினரை எப்படி குறைக்க முடியும்?' என்ற எதிர்க்கேள்வியை ஜெனீவாவில் ஆதாரங்களோடு முன் வைத்தால் சர்வதேசத்தால் எதுவுமே செய்யமுடியாமல் போய்விடும். தேனும் பாலும் போல படையினரும் தமிழ் மக்களும் பழகுகிறார்கள் என்று ஜெனீவா அமர்வில் காட்டவே படைத்தரப்பிடம் இப்படியான 'ரெடிமேட் மனிதம்' பிறப்பெடுத்துள்ளது. அதைப் புரிந்து நடந்தால் தமிழினம் பிழைத்துக் கொள்ளும்.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

## பல்கலை அனுமதி விண்ணப்பம்: விளக்கக் கலந்துரையாடல்







வவுனியா, ஜன.22

பல்கலைக்கழக அனுமதிக்கான தமிழ் மொழிமூல வழிகாட்டல் கருத்தரங்கு யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது.

வவுனியா வளாக ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தக் கருத்தரங்கில் உயர்தரத்தில் சித்தியடைந்த மாணவர்களுக்கு பல்கலைக் கழகங்களை தெரிவு செய்தல், பாடங்களை இனங்காணல் தொடர்பான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன.

வவுனியா வளாக முதல்வர் மங்களேஸ்வரன், சிரேஷ்ட உதவிப்பதிவாளர் ஆர்.ஜெயக்குமார், வவுனியா வளாக விரிவுரையாளர் ரி.கார்த்தீஸ்வரன், இரசாயனவியல் ஆசிரியர் ஏ.எஸ்.பரந்தாமன் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொண்டு மாணவர்களுக்கு வழிகாட்டல்களை வழங்கினர்.

விண்ணப்பிக்கும் முறையே அவர்களது பல்கலைக்கழக அனுமதியைத் தீர்மானிக்கின்றது எனவும், சில மாணவர்கள் தவறாக விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதால் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காமல் போன சந்தர்ப்பங்களும் உள்ளதாக இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது. (அ)

## ஊவா மாகாண முதலமைச்சரை அரசியலில் இருந்தே அகற்றுக!

கொழும்பு, ஜன.22

பதுளை தமிழ் மகாவித்தியாலய அதிபரை முழந்தாழிடச்செய்த ஊவா மாகாண முதலமைச்சரை அரசியல் அரங்கில் இருந்தே அகற்றுமாறு, ஜனாதிபதியிடம் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஜனாதிபதியிடம் சங்கத்தின் சார்பில் முன்வைத்த கோரிக்கையை சங்கத்தின் தலைவர் வி.ரி.சகாதேவராஜாவும், நிர்வாகச் செயலாளர் கே.நல்லதம்பியும் கூட்டாக ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

காலம் காலமாக தமிழ்பேசும் அதிபர்களும் ஆசிரியர்களும் பெரும்பான்மை இனம் சார்ந்த அரசியல்வாதிகளால் அடக்கப்பட்டே வருகின்றனர். அதன் உச்சக் கட்டமாக பதுளை தமிழ் மகாவித்தியாலய அதிபர் ஆர்.பவானி ஊவா மாகாண முதலமைச்சரால் முழந்தாழிடப் பணிக்கப்பட்டு அவமானப் படுத்தப்பட்டுள்ளார்.

கைகூப்பி வணங்கும் தெய்வங்களாக மதிக்கப்படவேண்டிய அதிபர், ஆசிரியர்களை மதிக்காமல் காட்டுமிராண்டித்தனமாக நடந்துள்ள முதலமைச்சர் சாமர சம்பத் என்பவரை அரசியல் அரங்கில் இருந்து முற்றாக வெளியேற்றுமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தமிழர்கள் என்றால் எதையும் செய்யச் சொல்லலாம் என்ற எண்ணம் பெரும்பான்மை இனம் சார்ந்த உயர்ந்த பதவிகளில் இருப்பவர்களிடம் இருப்பதனை முதலமைச்சரின் நடவடிக்கை வெளிப்படுத்தியுள்ளது. இதனை நாம் வன்மையாகக் கண்டிப்பதோடு, கல்வி அமைச்சின் சுற்றறிக்கையைப் பின்பற்றிய அதிபருக்கு இவ்வாறு தண்டனை வழங்கியிருப்பது மன்னிக்க முடியாத குற்றமாகும். ஆகையால் இவர்மீது நடவடிக்கை எடுக்கத் தவறினால் அதிபர்களும், ஆசிரியர்களும் அரசியல் சார்ந்த எவரையும் மதிக்கமுடியாத அளவுக்கு நடவடிக்கைகள் அமையும் என்பதனை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளதோடு, குறித்த அதிபரிடம் முதலமைச்சர் மன்னிப்புக் கோரவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளது- என்றுள்ளது. (அ)

## யாழ். சர்வதேசக் கண்காட்சி 26 ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன.22

யாழ்ப்பாண சர்வதேச வர்த்தகக் கண்காட்சி இம்மாதம் எதிர்வரும் 26 ஆம் திகதி தொடக்கம் 28ம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

இந்த, வருடாந்தக் கண்காட்சி 9 ஆவது தடவையாகவும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இது உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகர்கள் சந்திக்கும் களமாக அமைந்துள்ளதால் வடக்குக்கான நுழைவாயில் என்ற பெயர் கொண்டு இது அழைக்கப்படுகிறது.

யாழ். வர்த்தக கைத்தொழில் சம்மேளனம், இலங்கை கண்காட்சி மற்றும் மாநாட்டு சேவைகள் தனியார் நிறுவனம், யாழ் மாநகர சபை போன்றவற்றின் துணையுடன் இது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் 350 காட்சிக் கூடங்கள் அமைக்கப்படவுள்ளன என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (அ)

## முதலமைச்சரைப் போல ரணிலும் பதவி விலகுவாரா?



கொழும்பு, ஜன.22

தனக்கு எதிரான விசாரணைகள் நிறைவடையும் வரை மாகாணக் கல்வி அமைச்சுப் பதவியிலிருந்து விலகிய ஊவா மாகாண முதலமைச்சரை முன்னுதாரணமாகக் கொண்டு பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் பதவி விலக வேண்டும் என்று ஊவா பிரஜைகள் சம்மேளனம் வலியுறுத்தியுள்ளது.

பதுளை நகரின் பாடசாலை அதிபர் ஒருவருக்கு புதிய மாணவர்கள் சேர்க்கை தொடர்பில் அழுத்தம் கொடுத்த குற்றச்சாட்டு தொடர்பான விசாரணைகள் நிறைவடையும் வரையில் ஊவா மாகாண முதலமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க மாகாண கல்வி அமைச்சர் பதவியிலிருந்து விலகிக் கொண்டுள்ளார்.

இந்த நிலையில் முதலமைச்சரின் இந்தச் செயற்பாடு ஊவா மாகாணத்தில் அரசியலுக்கான முன்னுதாரணம் என்று ஊவா பிரஜைகள் சம்மேளனம் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஊவா மாகாண பிரஜைகள் சம்மேளனம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, பாடசாலையொன்றின் அதிபருக்கு அழுத்தம் கொடுத்த விவகாரம் தொடர்பான விசாரணைகள் நிறைவடையும் வரை மாகாண கலவி அமைச்சர் பதவியிலிருந்து விலகிய முதலமைச்சர் சாமர சம்பத்தின் நடவடிக்கை தொடர்பில் ஊவா மாகாணப் பொதுமக்கள் பெருமைப்படுகின்றனர்.

இதேபோன்று மத்திய வங்கியின் பிணைமுறி மோசடிகள் தொடர்பில் பெரும் குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்ரமசிங்க, பிணைமுறி மோசடிகள் தொடர்பான விசாரணைகள் நிறைவடையும் வரை பிரதமர் பதவியிலிருந்து இராஜினாமா செய்து முன்மாதிரியொன்றை வெளிக்காட்ட வேண்டும். அந்த விடயத்தில் அவர் முதலமைச்சர் சாமர சம்பவத்தின் முன்மாதிரியை பின்பற்ற வேண்டும் என்றும் ஊவா மாகாண பிரஜைகள் சம்மேளனம் வலியுறுத்தியுள்ளது. (அ)

## இன்று நாளும் கோளும்

22.01.2018 திங்கட்கிழமை ஏவிளம்பி வருடம் தை மாதம் 09 ஆம் நாள்

பஞ்சமி பி.ப. 01.38 மணி வரை | உத்தரட்டாதி மு.ப. 05.25 வரை | குளிகை 01.30-03.00

இராகுகாலம் 07.30 - 09.00 | சுபநேரம் மு.ப. 06.30 - 07.30 | எமகண்டம் மு.ப. 10.30 - 12.00

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுகம் | சோர்வு | நன்மை | இலாபம் | பாராட்டு | உழைப்பு | உற்சாகம் | சாந்தம் | வெற்றி | அலைச்சல் | பிரீதி | பரிசு |


# இராணுவத்தை வெளியேற்ற ஒற்றையாட்சியில் இடமில்லை

## வடக்கு முதலமைச்சர் ஆதங்கம்


செவ்வி கண்டவர் - Taylor Dibbert
வழிமூலம் - Huffington post
மொழியாக்கம் - நித்தியபாரதி


"எமது மக்களைக் கொன்றொழித்த, பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய, தமிழ் மக்களின் பொருட்களைச் சூறையாடிய அதே இராணுவத்தினர் தற்போது புதிய முகம் ஒன்றுடன் வந்துள்ளனர். வீடுகள் மற்றும் மலசலகூடங்களைக் கட்டிக்கொடுத்தல் போன்ற செயற்பாடுகளின் மூலம் மக்களின் மனதைக் கவருவதற்கான நடவடிக்கைகளை இராணுவம் முன்னெடுத்து வருகிறது. இதன்மூலம் தொடர்ந்தும் வட மாகாணத்தில் தங்குவதற்கான ஏற்பாடுகளில் இராணுவத்தினர் ஈடுபடுகின்றனர். ஒற்றையாட்சி முறைமை நீடிக்கும் வரை எங்களால் சிறிலங்கா இராணுவத்தை வெளியேற்ற இயலாது" என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். 'ஹ.:.பிங்டன் போஸ்ட்' (Huffington post) என்ற அனைத்துலக ஊடகத்துக்கு வழங்கியுள்ள நேர்காணலில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

அந்த நேர்காணல் இங்கு தரப்படுகின்றது.



*கேள்வி: மைத்திரிபால சிறிசேன மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கை ஜனாதிபதியாகப் பதவியேற்றார். இந்நிலையில் வடமாகாணத்தில் வாழும் மக்கள் எதிர்நோக்கும் அடிப்படைச் சவால்கள் எவை?*

பதில்: முன்னர் நிலவிய சூழல் தற்போதில்லை என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. பரந்துபட்டளவில் நோக்கில் ஜனநாயகம் மீண்டும் நடைமுறைக்கு வந்துள்ளது. ஆனாலும் எமது எதிர்பார்ப்புக்கள் இன்னமும் பூர்த்திசெய்யப்படவில்லை. இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம் முடிவுற்று ஒன்பது ஆண்டுகள் கடந்த போதிலும் கூட தற்போதும் 60,000 ஏக்கருக்கும் மேற்பட்ட தனியார் மற்றும் அரச காணிகள் இலங்கை இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ளன. நில உரிமையாளர்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்வதற்காகக் காத்திருக்கும் அதேவேளையில் இவர்களின் நிலங்களில் இராணுவத்தினர் பயிர்ச்செய்கைகளிலும் அறுவடைகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

இலங்கை அரசுக்குச் சொந்தமான பெரும்பாலான நிலங்கள் காடுகளாகும். இங்குள்ள பெறுமதி மிக்க மரங்கள் வெட்டப்பட்டு பிற தேவைகளுக்காக எடுத்துச் செல்லப்படுகின்றன. இந்த மரங்கள் யாரால் வெட்டப்படுகின்றன என்பது எங்களுக்குத் தெரியாது. இவ்வாறு காடுகள் அழிக்கப்படுவதால் யானைகள் தமது பாரம்பரிய வாழிடங்களை விட்டு வெளியேறி பொது மக்களுக்குச் சொந்தமான காணிகளில் நுழைவதுடன் அங்குள்ள பயிர்களையும் ஏனைய பொருட்களையும் சேதமாக்குகின்றன.

வன்னிப் பிரதேசத்தில் வாழும் இளம்பெண்களைத் தலைமையாகக் கொண்ட குடும்பங்கள் இராணுவத்தினரின் அச்சுறுத்தல்களுக்கு இலக்காகியுள்ளனர். இராணுவத்தினருக்கு எதிராக இவர்களால் முன்வைக்கப்படும் முறைப்பாடுகளை பொலிஸார் ஏற்க மறுக்கின்றனர்.

பல நூற்றாண்டுகளாக பாரம்பரிய மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வந்த எமது மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி இடங்களில் தென்பகுதி மீனவர்கள் மீன்பிடிக்கும் நிலை காணப்படுகிறது. இதற்கு இராணுவத்தினரும் தமது பாதுகாப்பை வழங்குவதால் எமது மீனவர்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கின்றனர். வடமாகாணத்தில் சட்டரீதியற்ற முறையில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் தென் பகுதி மீனவர்கள் தங்குவதற்காக முல்லைத்தீவு மாவட்டத்தின் நாயாறு பகுதியில் நிரந்தர தங்ககங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பெரும்பாலான எமது சுற்றுலாப்பயண மையங்கள் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன. இவர்கள் பல்வேறு விடுதிகளை நடத்தி வருகின்றனர். இந்த இடங்களிலும் மற்றும் இவற்றைச் சூழவுள்ள இடங்களில் பௌத்த விகாரைகள் அமைக்கப்படுகின்றன. இதன்மூலம் தற்போது சிங்களத்தில் பத்துன என பெயரிடப்பட்டுள்ள தமிழர்களின் வாழ்விடமான மாதகல் போன்ற இடங்கள் சிங்களவர்களுக்குச் சொந்தமான பூர்வீக நிலங்கள் என பொய்யான பரப்புரை மேற்கொள்ளப்படுகிறது.

அனைத்துப் பெயர்ப் பலகைகள் மற்றும் அறிவித்தல் பலகைகள் போன்றன சிங்களத்தில் எழுதப்பட்டுள்ளன. இவ்வாறான செயற்பாடுகளின் மூலம் வடக்கு கிழக்கானது சிங்களவர்களுக்குச் சொந்தமான நிலப்பிரதேசம் என இராணுவத்தினர் உரிமைகோர முயல்கின்றனர். சிங்களவர்கள் வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களை ஒருபோதும் பெரிய எண்ணிக்கையில் ஆக்கிரமிக்கவில்லை. தற்போது வடக்கு கிழக்கில் உள்ள பௌத்த எச்சங்கள் தமிழ் பௌத்தர்களால் கைவிடப்பட்டவையாகும்.

எமது மக்களின் வர்த்தக நடவடிக்கைகள் இராணுவத்தினரின் உறவுகளால் நடத்தப்படுகின்றன. வவுனியா தொடக்கம் சாவகச்சேரி வரையிலான ஏ–09 நெடுஞ்சாலையில் பெருமளவான சிங்களக் கடைகளைக் காணமுடியும்.

பிள்ளைகளுக்கான முன்பள்ளிகளை நடத்துவதற்காக இளம் தமிழ்ப் பெண்களை இலங்கைப் படையினர் அதிக சம்பளத்தில் நியமித்துள்ளனர். இவ்வாறு இணைக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு இராணுவத்தினரால் இராணுவப் பயிற்சிகள் மற்றும் உடற்பயிற்சிகள் வழங்கப்படுவதுடன் சீருடைகளும் வழங்கப்பட்டுள்ளன. இராணுவத்தால் பயிற்சி வழங்கப்பட்ட இத்தமிழ்ப் பெண்கள் முன்பள்ளிகளில் கல்வி கற்பிப்பதற்குப் பொருத்தமானவர்களா என மக்கள் வினவுகின்றனர். முன்பள்ளிக் கல்வி என்பது எமது கல்வித் திணைக்களத்தின் கீழுள்ள ஒரு அலகாகும்.

இராணுவத்தினர் எமது உள்விவகாரங்களின் தலையீடு செய்ய முடியாது. ஆனால் இவர்கள் எமது உள்விவகாரங்கள் தலையீடு செய்கின்ற போதிலும் அவர்களை யார் கேள்வி கேட்பது? எமது தொடர்பாடல்கள் எப்போதும் புறக்கணிக்கப்படுகின்றன. நாங்கள் நீதிமன்றம் சென்றாலும் கூட, பாதுகாப்புக் காரணங்களைச் சுட்டிக்காட்டி இராணுவத்துக்குச் சார்பாகவே தீர்ப்பு வழங்கப்படும்.

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தளவில் நிர்வாகமானது மூன்று வெவ்வேறு பிரிவினரால் நடத்தப்படுகிறது. அதாவது வடமாகாண ஆளுநர், மாவட்டச் செயலகங்கள் மற்றும் அவற்றின் அதிகாரிகள், இறுதியாக மக்களால் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட எங்களால் என மூன்று வெவ்வேறு நிர்வாக அலகுகள் வடமாகாணத்தில் நடைமுறையிலுள்ளன.

வடமாகாணத்தில் திட்டங்களை உருவாக்குவதற்கும் அமுல்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் தொடர்பில் எம்மீது நம்பிக்கை கொள்வதில்லை. அவர்களால் தெரிவு செய்யப்பட்ட பின்னர் இத்திட்டங்கள் தொடர்பாக எமக்கு அறிவிக்கப்படும். அவர்கள் தமது பணிகளை நிறைவேற்றுதற்காக எமது அதிகாரிகளைப் பயன்படுத்துகிறார்கள். ஆனால் இத்திட்டங்களை அமுல்படுத்துவதற்கான திறனை நாங்கள் கொண்டிருக்கவில்லை என அவர்கள் கதைவிடுகிறார்கள்.

அண்மையில், எனது அலுலகத்துக்கு அதிபரால் விருதுகள் வழங்கப்பட்டன. அனைத்து மத்திய அமைச்சர்கள் மற்றும் திணைக்களங்களின் அனைத்து அமைச்சுக்களை உள்ளடக்கிய 800 வரையான அலுவலகங்களில் எனது அலுவலகத்துக்கே ஜனாதிபதியால் முதலாவது விருது வழங்கப்பட்டது. ஆயினும் எம்மால் எதனையும் செய்ய முடியாது அதற்கான ஆளுமை எமக்கில்லை என அதிகாரம் மிக்க சிலரால் தொடர்ந்தும் குற்றம் சுமத்தப்படுகின்றது.

நாங்கள் எமக்கான திட்டங்களை அமுல்படுத்தாமையால் எமக்கென ஒதுக்கப்பட்ட நிதி மத்திய அரசாங்கத்தால் திருப்பி எடுக்கப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. நாங்கள் எமக்கான கடப்பாடுகளை நிறைவேற்றிய நிலையில் 31 டிசம்பர் 2017 வரையான கடந்த ஆண்டில் எம்மால் முன்வைக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டத்துக்கு அமைவாக 300 மில்லியன் ரூபாவை மத்திய அரசாங்கம் எமக்குத் தரவேண்டும் என நாம் எதிர்பார்க்கிறோம். எமது ஒப்பந்தகாரர்கள் தமது பணிகளைச் செய்து முடித்த நிலையில் இந்த நிதியை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

ஐக்கிய நாடுகள் சபை மற்றும் ஏனைய நிறுவனங்களிடம் இலங்கை வாக்களித்ததற்கு அமைவாக இன்னமும் இந்த நாட்டிலிருந்து பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படவில்லை. இச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள பல சந்தேகநபர்கள் எவ்வித வழக்குகளுமின்றி தொடர்ந்தும் சிறைகளில் வாடுகின்றனர். இவர்கள் தொடர்பில் நீதி எட்டுமாறு நாங்கள் ஜனாதிபதியிடமும் ஏனைய அதிகாரிகளிடமும் பல முறை கோரிக்கை விடுத்த போதிலும் எமது கோரிக்கைகள் அனைத்தும் செவிடன் காதில் ஊதிய சங்கு போன்று வீணாகி விட்டன.

இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட பலருக்கு என்ன நடந்தது என்பதை அவர்களின் அன்புக்குரியவர்கள் இன்றுவரை அறியமுடியாத நிலையிலுள்ளனர். அனைத்துலகச் சட்டத்தின் படி கைதுசெய்யப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதை இராணுவத்தினர் விளக்க வேண்டும்.

தமிழ் பேசும் பொலிஸாரை இணைத்துக் கொள்வதாக அறிவித்தல் விடுத்த போதிலும் இது செயற்படுத்தப்படவில்லை. வடக்கு கிழக்கில் கடமையில் ஈடுபடும் பொலிஸாரில் 90 சதவீதத்துக்கும் மேற்பட்டவர்கள் சிங்கள மொழி பேசுபவர்களாவர். 95 சதவீதத்துக்கும் அதிகமாக தமிழ் பேசும் மாகாணத்தில் சிங்கள மொழி பேசும் காவற்துறையினரே முறைப்பாடுகளைப் பதிவு செய்கின்றனர். முறைப்பாடுகளை தமிழ் பேசும் பொலிஸாரிடம் வழங்குவதற்கு பல மணித்தியாலங்கள் காத்திருக்க வேண்டிய நிலை காணப்படுகிறது. இவ்வாறு பல்வேறு சவால்கள் காணப்படுகின்றன.

*கேள்வி: எதிர்காலத்திலும் வட மாகாணமானது இராணுவமயப்படுத்தப்பட்டிருக்குமா? இந்த விடயத்தில் எவ்வித முன்னேற்றமும் எட்டப்படவில்லை என்பது தொடர்பாக நீங்கள் ஆச்சரியப்படுகிறீர்களா?*


பதில்: எப்போதும் வடமாகாணத்தில் இராணுவத்தை நிலை நிறுத்தி வைத்திருப்பதே நோக்கமாகும். இதற்காக இராணுவத்தினர் பொதுமக்களுக்கு உதவுவதில் ஈடுபடுகின்றனர். அதாவது வீடுகள் மற்றும் மலசலகூடங்களைக் கட்டிக் கொடுத்தல் போன்ற செயற்பாடுகளின் மூலம் மக்களின் மனதைக் கவருவதற்கான நடவடிக்கைகளை இராணுவம் முன்னெடுத்து வருகிறது. இதன்மூலம் தொடர்ந்தும் வடமாகாணத்தில் தங்குவதற்கான ஏற்பாடுகளில் இராணுவத்தினர் ஈடுபடுகின்றனர்.

எமது மக்களைக் கொன்றொழித்த, பாலியல் வன்புணர்விற்கு உட்படுத்திய, தமிழ் மக்களின் பொருட்களைச் சூறையாடிய அதே இராணுவத்தினர் தற்போது புதிய முகம் ஒன்றுடன் வந்துள்ளனர் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இத்திட்டத்தை உருவாக்கியமைக்காக தற்போதைய இராணுவத் தளபதி மகேஸ் சேனநாயக்கவை நான் வாழ்த்த வேண்டும். எங்களால் எமது மக்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கான போதியளவு நிதி வளத்தைக் கொண்டிராமையால் இவர்களுக்கு இராணுவத்தால் வழங்கப்படும் வீட்டுத் திட்டங்கள் மற்றும் ஏனைய திட்டங்களை நாம் மறுக்கமாட்டோம் என்பதை இராணுவத் தளபதி மகேஸ் சேனநாயக்க நன்கறிந்துள்ளார்.

ஆகவே ஒற்றையாட்சி முறைமை நீடிக்கும் வரை எங்களால் இராணுவத்தை வெளியேற்ற இயலாது. எமக்கான சமஷ்டி நிர்வாக அலகைக் கொண்ட அரசியலமைப்பை உருவாக்குவதைத் தவிர்ப்பதற்கான பல்வேறு வழிகளை அரசாங்கம் கண்டுபிடித்து வருகிறது. எமக்கான பாதுகாப்பு மற்றும் நலன்களை எமக்கு வழங்கக்கூடிய சமஷ்டி நிர்வாக முறைமை கொண்டுவரப்படாவிட்டால், இராணுவத்தினர் தொடர்ந்தும் எமது பிரதேசங்களை ஆக்கிரமித்துக் கொண்டேயிருப்பார்கள்.

*கேள்வி: நம்பகமான மற்றும் முழுமையான இடைக்கால நீதித் திட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பாக இலங்கை அரசாங்கம் அக்கறையற்று இருப்பது போல் தெரிகிறது. இது தொடர்பில் தங்களின் கருத்து என்ன?*

(5ஆம் பக்கம் பார்க்க)






## ஐ.தே.க. பரப்புரை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன.22

ஐக்கிய தேசிய கட்சியினர் யாழ். மாவட்டத்தில் தேர்தல் பிரசாரங்களை வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட சண்டிலிப்பாய் பிரதேசத்தில் நேற்று ஆரம்பித்தனர்.

மகளிர் சிறுவர்விவகார இராஜங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் இதன்போது, மக்களையும் தமது கட்சி வேட்பாளர்களையும் சந்தித்தார். (அ)



# எதிர்பாராத சந்திப்பு அரசியல் மாறுமா?

கொழும்பு, ஜன.22

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை , தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மகள் சந்தித்தமை அரசியல் அரங்கில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

பொலனறுவை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிபால கம்லத்தின் மகள் ரஞ்சா, டெங்கு நோயினால் பாதிக்கப்பட்ட நிலையில் அகால மரணமடைந்தார்.

அன்னாரின் இறுதிக் கிரியை நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் பல்வேறு மட்ட அரசியல் தலைவர்கள் கலந்து கொண்டனர். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும் இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக பொலனறுவைக்குச் சென்றிருந்தார்.



இதன்போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மகள் சத்துரிக்கா சிறிசேனவுடன், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச நீண்ட நேரம் கலந்துரையாடியுள்ளார். இதன்போது ஜனாதிபதியின் சகோதரரும் உடன் இருந்தார். சந்திப்பு தொடர்பான புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வெளியாகி உள்ளது. ஒரு மரண வீட்டில், எதிர்பாராத வகையில் இவர்களது சந்திப்பு இடம் பெற்றிருந்தாலும், அவர்கள் இருவரும் எது தொடர்பில் உரையாடியுள்ளார்கள் என்ற தகவல்க்ள் வெளிவரவில்லை.

கடந்த காலங்களில் ஊழல் மோசடியில் ஈடுபட்டவர்களைத் தண்டிக்கப் போவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எச்சரித்துள்ளார். இதற்கான ஒப்ரேஷன்-2 நடவடிக்கை ஆரம்பித்துள்ளதாகவும் இதிலிருந்து மோசடியாளர்கள் தப்பித்துக் கொள்ள முடியாது எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார். இவ்வாறான நிலையில், மஹிந்த - சத்துரிக்கா சிறிசேனவின் சந்திப்பு தொடர்பில் கொழும்பு மட்டத்தில் அதிகம் பேசப்பட்டு வருவதுடன், அரசியல் அவதாணிகளிடத்தில் சற்று குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## இராணுவத்தை வெளியேற்ற... (4ஆம் பக்கத் தொடர்ச்சி)

பதில்: இந்த நாட்டில் வாழும் அனைத்து சிறுபான்மை இனத்தவர்களையும் கணவர் போன்று மிகவும் கண்ணும் கருத்துமாகப் பார்ப்பதாக இலங்கை சுதந்திரமடையும் போது பிரித்தானியாவிடம் தெரிவித்திருந்தது. ஆனால் இக்கருத்திற்கு முரணாக இலங்கை செயற்படுவதன் மூலம் பிரித்தானியாவையும் இங்குள்ள சிறுபான்மையினரையும் முட்டாளாக்கியுள்ளதை அரசாங்கம் கவனத்திற் கொள்ளவேண்டும். பிரித்தானியா இந்த நாட்டை விட்டு வெளியேறிய பின்னர் ஆட்சியாளர்கள் அனைத்து அதிகாரங்களையும் தம்வசப்படுத்தியதுடன் தமது உண்மையான முகம் என்ன என்பதையும் காண்பிக்கத் தொடங்கினர்.

இடைக்கால நீதிப் பொறிமுறையானது அதிகாரப் பரவலாக்கல் மற்றும் குற்றவாளிகளுக்கான தண்டனை போன்றவற்றை உள்ளடக்குகிறது. ஆனால் அரசாங்கமானது தன்வசமுள்ள அதிகாரங்களை ஏனைய இனத்தவர்களுடன் குறிப்பாக தமிழ் சமூகத்துடன் பகிர்ந்து கொள்ள விரும்பவில்லை. அத்துடன் சித்திரவதை, பாலியல் வன்புணர்வு, கொள்ளையடித்தல், கொடூரத் தாக்குதல்கள் போன்ற போர்க் குற்றங்களில் ஈடுபட்டவர்களைத் தண்டிப்பதற்கு அரசாங்கம் விரும்பவில்லை. பதிலாக இவர்களைக் கதாநாயகர்கள் என அரசாங்கம் புகழ்கின்றது.

இவ்வாறானதொரு அரசாங்கம் இடைக்கால நீதிப்பொறிமுறையை அமுலாக்குவது தொடர்பில் தீவிர கவனம் செலுத்தும் என தாங்கள் கருதுகிறீர்களா? அவர்கள் கதை பேசுவதில் மட்டும் வல்லவர்கள். இவர்கள் அனைத்துலக சமூகத்திடம் வாக்குறுதிகளை வழங்குவதன் மூலம் தமிழ் மக்களை மீண்டும் மீண்டும் முட்டாளாக்குகின்றனர்.

*கேள்வி: சிறிசேன அரசாங்கத்துடனான ஏனைய நாடுகளின் உறவானது குறிப்பாக அமெரிக்காவின் உறவுநிலையானது மிகவும் நெருக்கமடைந்துள்ளது. இவ்வாறான உறவுநிலையானது இலங்கையில் சீர்திருத்தம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான உந்துவிசையாக அமைகிறதா?*

பதில்: சிறிசேன அரசாங்கத்தை அவர்கள் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் பாராட்டியிருந்தன. ஆனால் இதே நிலை தற்போதும் காணப்படுகிறதா என்பது சந்தேகமே. இதற்கான வேற்றுத் தெரிவை அனைத்துலக நாடுகள் கொண்டிருக்காமல் இருக்கலாம். ஆனால் சிறிசேன அரசாங்கத்தின் முன்னேற்றமற்ற செயற்பாடுகள் இந்த நாடுகளை தற்போது அதிருப்திக்கு உள்ளாக்கியுள்ளன என்பது நிச்சயமானதாகும். இந்த நாடுகளின் பாராட்டுக்கள் மற்றும் ஆர்வமான அணுகுமுறை போன்றன இலங்கையில் சீர்திருத்தம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான உந்துதலை வழங்கவில்லை. சிங்களத் தலைவர்கள், சிறுபான்மை சமூகத்தை நசுக்குகின்ற பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்களாவர். இந்த நிலையானது சிறுபான்மையினருக்கு குறிப்பாக தமிழ் மக்களுக்குச் சார்பான இதயசுத்தியுடனான சீர்திருத்தம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு அனுமதிக்காது. இடைக்கால நீதிப் பொறிமுறையை உள்ளடக்கிய சீர்திருத்தமானது அனைத்துலக சமூகத்திடமிருந்து எழும் அழுத்தங்கள் மூலம் மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும்.

*கேள்வி: நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல்கள் தொடர்பாக தாங்கள் ஏதாவது எதிர்வுகூறல்களைக் கொண்டுள்ளீர்களா?*

பதில்: எதுவுமில்லை.

## அப்ப பாப்பம் ஐயா, பாப்பம் அம்மா, பாப்பம் என்ன? பாப்பம்.

என்னடா இது ஒரு புதுக்கதையாக் கிடக்கு? புத்துக்கை இருந்து புதுப்புதுப் பாம்புகள் வாறமாதிரி, புதுக்கதையளும் வெளியிலை வருகிது. தராக்கியைக் கொண்டவனும் கூட்டமைப்புக்குள்ளை தானாம் இருக்கிறான் எண்டு வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் சொல்லி இருக்கிறார். சுடச்சுட வடை திண்ட மாதிரி இப்ப கான்போனுக்குள்ளாலை சுடச்சுடச் செய்தியளும் வருகிது. கூட்டமைப்புக்குள்ளை இருக்கிற கட்சியள் கூட்டமைப்பெண்டு சொல்லிக் கொண்டு போட்டிபோடுற கடைசித் தேர்த்தல் இதுதான் எண்டு சாத்திரம் வேறை சொல்லி இருக்கிறார்.

அப்ப அடுத்தமுறை உவையள் அதுதான் கூட்டமைப்புக் காரர் என்ன செய்வினம் எண்டு பேப்பர் கடைக்கு வாற கச்சேரித் தம்பீட்டைக் கேட்டன். அவர் சொன்னார், "அண்ணை இப்ப இருக்கிற நிலைமையளை வைச்சுக் கொண்டு ஒண்டையும் சொல்லேலாமல் கிடக்கு. அடுத்த நிமிஷம் என்ன நடக்குமெண்டதைச் சொல்லேலாது. அப்பிடி ஆராலையும் சொல்லேலுமெண்டால் மைத்திரி மாட்டியிருப்பர். அவர் அப்பம் தின்னேக்கையே மகிந்த கைவிலங்கைப் போட்டு ஆளைக் கடத்தியிருப்பர். அவர் இராத்திரி சாப்பிட்டுவிட்டுப் படுத்திட்டு விடிய எழும்பேக்கை பாத்தால் சந்திரிகா வோடை நிண்டு அட்டகாசமா ஒரு செய்தியை விட்டார். இப்ப மகிந்தா என்ன சொல்லி புலம்பியிருப்பர்" எண்டு கற்பனையிலை இப்பிடி ஒரு பிளாஸ் பாக்.

"எட சண்டாளன் அப்பம் தின்னேக்கை அக்கான்ரை கட்டைச் சம்பல் நல்லாக்கிடக்கு. அவவின்ரை கையாலை செய்த மாசிச் சம்பலுக்கு இணையா ஒண்டும் இல்லை. அவ சமைச்ச கோழி புரியாணியும், அம்பிறெல்லா சட்டினியும் அந்தமாதிரி" எண்டு அப்பக் கரையைப் பிச்சுச் சம்பலிலை தொட்டுத் திண்டபடி வைச்சானே எனக்கு வேட்டு. அப்ப தன்னும் மைத்திரியின்ரை செயற்பாட்டிலை ஒரு வித ஐமிச்சமும் எனக்கு இருக்கேல்லை. அடுத்த முறை நான் பதவிக்கு வந்தால் நடிகர் திலகம் மைத்திரிதான் எண்டு விருது கொடுப்பன். இனிமேல் பார்ட்டியிலை அப்பம் பரிமாறப்பிடாது எண்ட சட்டத்தையும் உடனடியாகக் கொண்டு வருவன். இப்ப அப்பத்தை நான் கண்ணாலை கூடப் பாக்கிறதில்லை. ஏனெண்டால் அப்பத்தைக் காணக் காண எனக்கு மைத்திரியின்ரை துரோகந்தான் ஞாபகத்துக்கு வருகிது" எண்டுதானே மகிந்தா ஒப்பாரி வைச்சிருப்பர் எண்டு சும்மா கற்பனை செய்து பாத்தன்.

உதை விட்டிட்டுச் சிவசக்தி ஆனந்தன் சொன்னதைப் பாத்தால் அவரிட்டை இன்னும் பல சுவையான கதையள் இருக்கெண்ட மாதிரித்தான் தெரியிது. முன்னாள் ரெலோ நாடாளுமன்ற உறுப்பினரும் அவற்றை பக்கம் வாறன் எண்ணிறாராம். அவரோடை சித்தரும் சீ.எம் மோடை வாறன் எண்ணிறாராம். தமிழ் தேசியக் கூட்டமைப்பின்ரை ஆக்கள் கவுண்மென்றிற்றைக் கை நீட்டிக் காசு வாங்கிப் போட்டினம் எண்டு, தவளை மாதிரித் திரும்பத் திரும்பக் கத்திறன். ஆரும் அக்கறைப் பட்டமாதிரித் தெரியேல்லை. ஆனால் அதுக்கு ஆரும் மறுப்பறிக்கை தன்னும் விடேல்லை. அதனாலை மௌனம் சம்மதம் எண்டு தானே எடுக்க வேண்டிக் கிடக்கு.

நக்குண்டார் நாவிழார். ஆனபடியால் எங்கடை தமிழ் கூட்டமைப்பு அரசியல்வாதியள் அரசாங்கத்துக்கு எதிரா ஒண்டும் கதைக்க மாட்டினம். உவையளை நம்பி இருக்கிறதும் கஷ்டம்தான். இடைக்கால அறிக்கையிலை இருக்கிற நல்லது கெட்டதுகளை கூட்டமைப்பு வாய் திறந்து சொல்லாது. எல்லாம் கடைசியிலை ஆபத்தாத்தான் வரும்போலை கிடக்கு. பாப்பம் தம்பி. பாப்பம் மோனை, பாப்பம் ஐயா, பாப்பம் அம்மா, பாப்பம் எல்லாரும், பாப்பம், பாப்பம், பாப்பம் எண்டவுடனை சேனா அண்ணையே ஞாபகத்துக்கு வாறார்? அப்ப வாறதையும் என்னெண்டு பாப்பம்.

- வில்லங்கம் விநாசி

# தாமரை மொட்டு மரத்துக்கு தாவல்

ஏறாவூர், ஜன.22

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் தாமரை மொட்டு அணியின் சார்பில் ஏறாவூர் நகர சபைக்கான வேட்பாளர்கள் அனைவரும், ஐக்கிய தேசியக் கட்சி சார்பிலான மரச்சின்னத்தில் போட்டியிடும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சிப் பக்கம் தாவியுள்ளனர்.

இந்தத் திடீர் கட்சித் தாவல், ஏறாவூரில் நேற்று முன் தினம் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதித் தலைவரும் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் முன்னிலையில் இடம்பெற்றது.

ஏறாவூர் நகர சபைக்கான வேட்பாளர் கே.எல். அக்கீல் அர்சாத் தலைமையிலான குழுவினரே, இவ்வாறு ஸ்ரீல.மு.கா. பக்கம் தாவியுள்ளனர்.

எதிர்வரும் 26ஆம் திகதி ஏறாவூர் உட்பட மட்டக்களப்பு மாவட்டத்தின் சில இடங்களுக்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச வரவுள்ளதாக எதிர்பார்க்கப்பட்டிருந்த வேளையில், தாமரை மொட்டு வேட்பாளர்களின் இந்த கட்சித் தாவல் இடம்பெற்றுள்ளது.

தாமரை மொட்டுக் கட்சியின் தலைமைகள், ஏறாவூர் பகுதியில், தேர்தல் நடவடிக்கையில் ஈடுபடும் அக்கட்சி சார்பிலான அபேட்சகர்களை புறக்கணித்துள்ளதாகவும், இதனாலேயே தாம் கூண்டோடு கட்சி மாறியதாகவும் அதிருப்தியை வேட்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், ஏறாவூரில் நேற்று முன் தினம் இரவு நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சி பிரசார மேடைக்கு திடீரென வந்த மர்ந்த அவர்கள் அனைவரும், முன்னாள் முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் உடன் தாங்கள் நிபந்தனையின்றி இணைந்து கொள்வதோடு அந்த அணியின் வெற்றிக்காகப் பாடுபடவுள்ளதாகவும் தெரிவித்தனர்.

ஏறாவூர் நகரின் திட்டமிட்ட பெரு நகர அபிவிருத்திக்கான குறிக்கோளை முன்னாள் முதலமைச்சர் கொண்டிருப்பதால் தாங்கள், ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிடும் அணியில் இணைந்து கொண்டிருப்பதாக, அக்கீல் அர்சாத் தெரிவித்தார்.(அ)

# தொடர்ச்சிகள்

## பெரும் இன அழிப்பு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீங்களும் கூட, வட மாகாணத்தில் சிங்கள மக்கள் குடிகொள்ளப் பார்க்கின்றார்கள், எமது பாரம்பரியம் அழியப் போகின்றது என்றெல்லாம் குரல் எழுப்புகின்றீர்கள். தமிழராகிய நாம் பெருவாரியாக கொழும்பில் குடியிருக்கின்றோமே அது சிங்களப் பாரம்பரியத்தை அழிப்பதாக அர்த்தம் கொள்ள முடியாதா? நீங்கள் உங்கள் கூக்குரல்களால் கொழும்பில் வசிக்கும் எம்மையெல்லாம் அவதிக்குள்ளாக்குகின்றீர்கள் என்பதை ஏன் புரிந்து கொள்ள மாட்டீர்கள்?" எனக் கொழும்பில் இருந்து எழுப்பப்பட்ட வினாவுக்குப் பதிலளித்தார்.

இக்கேள்விக்குப் பல தரவுகளுடன் அவர் அளித்த பதிலின் முக்கிய விடயங்கள் மட்டும் வருமாறு

"ஒரு காலத்தில் தமிழ் மக்கள் நாடு பூராகவும் பரந்து வாழ்ந்தார்கள். காணிகள் வைத்திருந்தார்கள், கடைகள் வைத்திருந்தார்கள், கோயில்கள் கட்டி வழிபட்டு வாழ்ந்தார்கள். இது வெள்ளையர் ஆண்ட காலத்திலும் சிங்களம் மட்டும் சட்டம் 1956 ஆம் ஆண்டு வரும் வரையிலும் இருந்த நிலை. 1958 ஆம் ஆண்டு இனக்கலவரம் எம்முள் பலரை தெற்கிலிருந்து விரட்டியது. அதன்பின் 1961, 1977, 1983 என்று பல கலவரங்கள் தெற்கில் இருந்த தமிழ் மக்களை இருந்த இடம் தெரியாமல் விரட்டின. காணி பூமிகளை, ஆதனங்களை எல்லாம் பறிகொடுத்துவிட்டு எம்மவர் தெற்கைவிட்டு நீங்கினார்கள். தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த பிரதேசங்கள் வடக்கு, கிழக்கே என்பதை அரசாங்கமே ஏற்றுக் கொண்டு கப்பல்கள் மூலம் தெற்கில் வாழ்ந்த தமிழ் மக்களை வடக்குக் கிழக்கு நோக்கி அனுப்பி வைத்தனர்."

ஆனால் கொழும்பு சிங்கள நகர் அல்ல. அது பல் இன, பல் சமய, பன் மொழி பேசும் மக்கள் வாழும் நகரம். நாட்டின் தலைநகரம். பாதுகாப்புக் கருதி முன்னரும், யுத்தத்தின் போதும், அதன் பின்னரும்கூட வட, கிழக்குத் தமிழ் மக்கள் கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் காணிகள் வாங்கி வீடு கட்டி வந்திருப்பது தமது தேவைகளின் நிமித்தம் பல வித சொந்தக் காரணங்களின் நிமித்தமே. அவர்கள் தமது சொந்தப் பணத்தில், இல்லையென்றால் வங்கிகளிலோ வேறெங்கிருந்தோ கடன் எடுத்தே வீடுகள் கட்டினார்கள். ஆகவே கொழும்பு நகரமானது, டச்சுக்காரர் காலத்தில் இருந்து, ஆங்கிலேயர் காலத்தில் இருந்து சிங்கள நகர் அல்ல. பல்லின மக்களின் வாழ்விடம். அங்கு தமிழ் மக்கள் பாதுகாப்பு, கல்வி, சீதோஷ்ணநிலை, வேலைத்தள அண்மை போன்ற பல்வித தனிப்பட்ட காரணங்களுக்காகத் தமது சொந்தப் பணத்தில் வீடு கட்டி குடியிருந்து வந்தார்கள். ஆனால் அவ்வாறு வாழ்ந்து வந்த தமிழர்கள் அரசாங்க அனுசரணையுடன் 1958 இலும் 1983 இலும் அடித்துத் துரத்தப்பட்டார்கள் என்பதை நாம் மறக்கக் கூடாது. ஆனால் வடகிழக்கு மாகாண சிங்களக் குடியேற்றங்கள் அப்படிப்பட்டதா?

1971 - 72 இல் திருகோணமலையில் சிங்கள் குடியேற்றம் தொடங்கியது. பல உதவிகளை செய்வதாக வாக்குறுதி அளித்து மாத்தறையில் இருந்து சிங்கள மக்கள் பலரை அரசாங்கம் கொண்டு வந்து அங்கு குடியேற்றியது. சிங்கள மக்கள் தன்னிச்சையாக வடக்கு, கிழக்குக்கு வரவில்லை. கல்வி, காணி தேடியோ சீதோஷ்ணம் நாடியோ அவர்கள் வரவில்லை. அரசியல்வாதிகளின் பலாத்காரம் அல்லது ஆசை வார்த்தைகளின் நிமித்தமே வந்தார்கள். அவர்கள் தொடர்ந்து இருந்ததால் இன்று ஜெயந்திபுர, அசோகபுர, சிரிமாபுர என்றெல்லாம் புரங்கள் வளர்ந்துவிட்டன. இவ்வாறுதான் சிங்களக் குடியேற்றங்கள் ஆரம்பித்தன.

எம்மை நாட்டின் பல பாகங்களிலும் இருந்து விரட்டி அடித்து விட்டு காலாதிகாலமாக நாம் வாழ்ந்து வரும் இடங்களையும் கையகப்படுத்த அரசாங்கத்தால் நிகழ்த்தப்பட்டுவரும் நடவடிக்கை. எம்முள் 10 இலட்சத்துக்கு மேற்பட்டவரை நாட்டில் இருந்து விரட்டியாகிவிட்டது. தொடர்ந்து எமது பூர்வீக நிலங்கள் என்று இதுவரை அடையாளப்படுத்தப்பட்டு வந்த எமது நிலங்களை ஆக்கிரமிக்கும் செயலே இந்த அரச குடியேற்றம். இதை எம் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். தன்னிச் சைக்குந் தான் தோன்றியான அரசியலிடைக்கும் இருக்கும் வேற்றுமையை அறிந்து கொள்ள வேண்டும்.

வவுனியாவில் கொக்கச்சான்குளம் பாரம்பரியமாகத் தமிழர் வாழ்ந்த கிராமம். அங்கு சில சிங்கள்க் குடும்பங்களும் அண்மைக் காலங்களில் வாழ்ந்து வந்தனர். அவர்கள் யாவரும் விவசாயிகள். போர்க் காலத்தின்போது தமிழ் மக்கள் இராணுவத்தினரால் விரட்டியடிக்கப்பட்டனர். சிங்களக் குடும்பங்கள் விடுதலைப் புலிகளால் விரட்டியடிக்கப்பட்டனர். போர் முடிந்த பின் மிக அண்மையில் சிங்கள மக்கள் அங்கு இராணுவத்தினரால் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர். சுமார் ஆயிரம் சிங்களக் குடும்பங்கள் அம்பாந்தோட்டையில் இருந்து அங்கு கொண்டுவந்து இராணுவத்தினரால் குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் விரட்டியடித்த குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் என்று கூற முடியாது. எவ்வாறெனினும் வெளிப்படைத் தன்மையுடன் அவர்களின் உறவு முறை எதுவும் ஆராயப்படவில்லை. திடீரென கோக்கச்சான் குளம் கொளபஸ்ஃவவ என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மேலும் சிங்கள மக்கள் கொண்டுவரப்பட்டுக்கொண்டே இருக்கின்றார்கள்.

இதேபோல் முன்னர் மணலாறு வெலிஓயா ஆனது. யாழ்ப்பாணத்தில் நாவற்குழியில் 120 சிங்களக் குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். அவர்களுக்கு பிக்குகளும் இராணுவமும் உதவிகளை வழங்கி வருகின்றனர். முல்லைத்தீவின் தண்ணீர் முறிப்புக் குளத்திலும் சிங்களக் குடியேற்றம் இடம்பெறுகிறது. பாலைதீவு, இரணைதீவு இராணுவத்தின் வசம். முல்லைத்தீவில் 650 ஏக்கரை நிரந்தரமாகக் கேட்கிறது கடற்படை. மன்னாரை அண்டிய தீவுகளும் கடற்படையிடமே. அவற்றை வைத்து அது பணம் உழைக்கிறது. ஏ-9 வீதியில் பல கடைகள் தென்னிலங்கையரிடமே- என்றும் அந்தப் பதிலில் முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ச)

## பதவி விலகினார்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேட்டுள்ளேன். இதற்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையிலேயே முதலமைச்சர் மற்றும் கல்வியமைச்சுப் பதவிகளில் இருந்து விலகியுள்ளேன்.

மாணவி ஒருவரை பதுளை தமிழ் வித்தியாலயத்தில் சேர்த்துக் கொள்ளுமாறு அதிபரை நான் கேட்டுக் கொண்டேன். அதை அவர் ஏற்க மறுத்துவிட்டார். இதனால் மாணவியின் கல்வி பாதிக்கப்படும் என்பதைக் கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்ட அதிபரை வீட்டுக்கு அழைத்து நடைமுறையில் உள்ள சட்டவிதிகளுக்கு அமைய மாணவியை பாடசாலையில் இணைத்துக் கொள்ளுமாறு கூறினேன்.

இதன்போது மாகாண தலைமைக் கல்விப் பணிப்பாளர், மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோரும் உடனிருந்தனர். நான் கேட்டதற்கிணங்க அந்த மாணவியை பாடசாலையில் இணைத்துக் கொள்வதாக அதிபர் தெரிவித்தார். பின்னர் மரியாதை செலுத்தும் விதமாக தலை வணங்கி சென்றார். இதை அடிப்படையாகக் கொண்டு அரசாங்கத்துக்கும் ஊவா மாகாண சபைக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் குறிப்பிட்ட கட்சி எனக்கு எதிராக அதிபரை முழந்தாழிடச் செய்ததாக தெரிவித்து உண்மைக்குப் புறம்பான பிரசாரத்தை முன்னெடுத்துள்ளது - என்று கூறினார். (ச)

## மணிவண்ணனிடம்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் விஞ்ஞாபனம் அண்மையில் வெளியிடப்பட்டது. இதன்போது உரையாற்றிய முன்னணியின் அமைப்பாளரும் யாழ். மாநகர முதல்வர் வேட்பாளருமான மணிவண்ணன் "தமிழ்த் தேசியப் பேரவைக்கு எதிராக தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ரட்ணஜீவன் கூல் செயற்படுகிறார். தேர்தல் முடிவடைந்த பின்னர் அந்நடவடிக்கைகளுக்கு எதிராகப் பதில் வழங்கப்படும்" எனச் சாடியிருந்தார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இந்தக் குற்றச்சாட்டால் தமக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக ரட்ணஜீவன் கூல் தேர்தல்கள் ஆணைக்குழு, பிரதிப் பொலிஸ் மா அதிபர், பவ்ரல் அமைப்பிடம் முறைப்பாடுகளை செய்திருந்தார்.

இது தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்துள்ள யாழ்ப்பாணப் பொலிஸார், குற்றச்சாட்டு தொடர்பில் மணிவண்ணனை அழைத்து விசாரணைகளை மேற்கொண்டதுடன் அவரின் வாக்குமூலத்தையும் பதிவு செய்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## தனியாக... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மானிப்பாய் - ஆனைக்கோட்டை, பொன்னையா வீதியைச் சேர்ந்த ஜெகநாதன் சத்தியபாமா (வயது 72) என்ற மூதாட்டியே நேற்றிரவு 7.30 மணியளவில் சடலமாக மீட்கப்பட்டார்.

உறவினர்கள் எவருமின்றி தனியாக வசித்து வரும் மூதாட்டி நடக்க முடியாதவர். அயலவர்களே அவருக்கு உணவு வழங்கி வந்தனர். கிளிநொச்சியில் வசிக்கும் அவரின் பெறாமகன் பார்வையிட்டு செல்வார். நேற்று மதியம் சென்ற அவர், மூதாட்டிக்கு மதிய உணவு கொடுத்து விட்டு சென்றுள்ளார்.

அவரின் பாதுகாப்புக்காக இரவில் தங்கும் அவரின் உறவினர் இரவு 7.30 மணியளவில் சென்றபோது, வீட்டின் கதவுகள் திறந்திருப்பதையும் இருட்டாக இருப்பதையும் கண்டு சந்தேகப்பட்டு மூதாட்டியின் அறைக்கு சென்றுள்ளார். வீட்டின் முதன்மை ஆழி நிறுத்தப்பட்டதால் மின்சாரம் தடைப்பட்டிருந்தது. அதனை இயக்கி மின் ஒளியில் பார்த்தபோது மூதாட்டி அடிகாயங்களுடன் இறந்து கிடந்ததை அவதானித்த அவர், மானிப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கினார்.

இறந்தவர் அணிந்திருந்த மோதிரம், தோடுகள் இல்லாமையால் அவற்றைப் பறிக்கவே மூதாட்டி கொல்லப்பட்டிருக்கலாம் எனக் கூறப்படுகின்றது. மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ச)

## இரண்டு கோடி... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்திடம் இரண்டு கோடி ரூபாவைப் பெற்றனர் என சிவசக்தி ஆனந்தன் எம்.பி. கூறியுள்ளார். முடிந்தால் அதை ஆதாரத்துடன் நிரூபிக்க முடியுமா?

உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடும் ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியினர் எந்த வட்டாரத்திலும் வெல்லமாட்டார்கள். தமிழ் மக்களை அக்கட்சியினர் கொலை செய்ததையும், கொன்று குவித்ததையும் மக்கள் மறந்து விடமாட்டார்கள்.

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக போராட்டத்தை நடத்தியது சிவசக்தி ஆனந்தன் எம்.பியே என இதன்போது சிறிதரன் எம்.பி. சாடினார்.

மேலும், "நாங்கள் இந்த தேர்தலில் இடைக்கால அறிக்கைக்கு ஆணை வழங்குகள் என்று மக்களிடம கோரவில்லை இது அதற்கான தேர்தலும் அல்ல. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமே இலக்கு நோக்கி பயணிக்கிறது" என்றும் அவர் சொன்னார். (ச)

## பொலிஸ் கீதம்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிபர் வளாகத்தில் பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தலைமையில் நடைபெற்றது.

பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு தமிழ் பொலிஸ் கீதத்தை வெளியிட்டார்.

பொலிஸ் கீதத்தை வீரசிங்கம் பிரதீபன் மொழி பெயர்த்தார். வவுனியாவை சேர்ந்த பாடகர் கந்தப்பு ஜயந்தன் கீதத்தைப் பாடியுள்ளார். (ச)

## மூடப்பட்டது... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனால், அமெரிக்க நேரப்படி, 12.01 மணியில் இருந்து அமெரிக்காவின் பெரும்பாலான அரசுப் பணியகங்கள் செயலிழக்கவுள்ளன. குறிப்பாக நுழைவிசைவு வழங்கும் பணிகளில் பெரும் பாதிப்பு ஏற்படும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதுகுறித்து கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், திட்டமிட்டபடி, கடவுச்சீட்டு மற்றும் நுழைவிசைவு சேவைகள் தொடரும் என்றும், அமெரிக்க மையம் மறு அறிவித்தல் வரும் வரை மூடப்பட்டிருக்கும் என்றும் கூறியுள்ளது. (ச)

## கதிர்காமம்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபட்டவர்களை அடக்கும் முயற்சியில் ஈடுபட்ட பொலிஸார் இதுவரை 63 பேரைக் கைது செய்துள்ளனர். ஆனாலும் அங்கு எதிரப்புக்கள் இடம்பெறுவதுடன் பதற்ற நிலை தொடரந்து வருகிறது.

இதேவேளை, துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட பொலிஸ் உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ச)

## ரவி கருணாநாயக்கவை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படையிலேயே அவர் கைது செய்யப்படவுள்ளார் என ஜனாதிபதி செயலகம் நடத்தும் இணையம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

பிணைமுறி தொடர்பாக ஜனாதிபதி ஆணைக்குழுவில் பொய் சாட்சியம் வழங்கினார் என்ற குற்றச்சாட்டிலேயே ரவி கருணாநாயக்க கைது செய்யப்படவுள்ளார். முழுமையான நீதிமன்ற அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் பொய் சாட்சியம் வழங்கியமை பெரும் குற்றமாகும்.

ரவி கருணாநாயக்க கைதாவதற்கு முன்னதாகவோ அல்லது பின்னதாகவோ ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவரை கைது செய்ய ஐக்கிய தேசிய கட்சி ஈடுபடுவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ச)

# விஜய் படத்தில் ஜெயமோகன்



சென்னை, ஜன.22

ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் விஜய் நடிக்கும் புதிய படத்துக்கு ஜெயமோகன் வசனம் எழுதியுள்ளார்.

ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் விஜய் நடிக்கும் பெயரிடப்படாத புதிய படத்தின் முதற்கட்டப் பணிகள் தீவிரமாக நடைபெற்றன. இசையமைப்பாளராக ஏ.ஆர்.ரஹ்மான், நாயகியாக கீர்த்தி சுரேஷ், ஒளிப் பதிவாளராக க்ரிஷ் கங்காதரன் மற்றும் எடிட்டராக ஸ்ரீகர் பிரசாத் ஆகியோர் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர். இதற்கான அறிவிப்பை தங்களுடைய ருவிட்டர் பக்கத்தில் தயாரிப்பு நிறுவனமான சன் பிக்சர்ஸ் அறிவித்தது.

இந்த நிலையில், தற்போது படப்பிடிப்பு ஆரம்பித்துள்ளது.

இந்தப் படத்துக்கு ஜெயமோகன் வசனம் எழுதியுள்ளர்ர். 'அங்காடித் தெரு', 'நீர்ப் பறவை', 'கடல்', 'ஏமாலி', '2.0' உள்ளிட்ட படங்களைத் தொடர்ந்து ஏ.ஆர்.முருகதாஸ் - விஜய் படத்துக்கும் ஜெயமோகன் வசனம் எழுதி இருப்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# காலா டப்பிங்கில் ரஜினி




சென்னை, ஜன.22

ரஜினிகாந்த் நடித்துள்ள 'காலா' படத்தின் டப்பிங் பணி சென்னை மைலாப்பூரில் உள்ள நாக் ஸ்டூடியோவில் நடைபெறுகிறது. இதில் தன் டப்பிங் பணிகளை நேற்றுத் தொடங்கினார் ரஜினிகாந்த்.

'கபாலி' படத்தைத் தொடர்ந்து, ரஜினி மற்றும் இயக்குநர் ரஞ்சித் ஆகியோரின் கூட்டணியில் உருவாகியுள்ள படம் 'காலா'.

இந்தப்படத்தினை நடிகர் தனுஷ் தயாரிக்க, சந்தோஷ் நாராயணன் இசையமைத்துள்ளார். மேலும், இதில் சமுத்திரக்கனி, நானா படேகர், சம்பத், சாயாஜி ஷிண்டே, அருள்தாஸ், ஹூமா குரேஷி, 'வத்திக்குச்சி' திலீபன், அரவிந்த் ஆகாஷ், சுதான்ஷூ பாண்டே, ஈஸ்வரிராவ், சாக்ஷி அகர்வால் என பலரும் நடித்துள்ளனர்.

படப்பிடிப்பு முடிவடைந்த நிலையில் ரஜினிகாந்த் தனக்கான டப்பிங்கை நாக் ஸ்டூடியோவில் நேற்றுத் தொடங்கினார். 'காலா' திரைப்படம் 2018 ஆம் ஆண்டு திரைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (அ)



# பட்டாசுக் கிடங்கில் தீ 17 பேர் கருகிப் பலி

புதுடெல்லி, ஜன.22

டெல்லியில் உள்ள பட்டாசுக் கிடங்கில் நேற்று முன்தினம் மாலை ஏற்பட்ட மிகப் பெரிய தீ விபத்தில் 17 பேர் உடல் கருகி பலியானார்கள். 2 பேர் படுகாயமடைந்தனர்.

இது குறித்து விசாரணை நடத்த டெல்லி மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

டெல்லி தீ தடுப்பு சேவையின் இயக்குநர் ஜி.சி. மிஸ்ரா நிருபர்களிடம் கூறியதாவது:

"டெல்லி பாவனா தொழிற்பேட்டை பகுதியில் உள்ள 2 அடுக்குத் தளத்தில் தீ விபத்து ஏற்பட்டதாக தொலைபேசி அழைப்பு வந்தது. இதையடுத்து, அங்கு 10க் கும் மேற்பட்ட தீயணைப்பு வாகனங்களுடன் சென்று தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டோம். ஏறக்குறைய 3 மணி நேரப் போராட்டத்துக்குப் பின், தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

இந்தக் கட்டடத்தில் பட்டாச்கள் விற்பனைக்காக வைக்கப்பட்டு இருந்ததாக முதல் கட்ட விசாரணையில் தெரியவந்தது. இந்தத் தீ விபத்தில் 7 பெண்கள் உட்பட 17 பேர் உயிரிழந்தனர். இது தொடர்பாக விசாரணை நடந்து வருகிறது" என்றார். (அ)

# காதலனோடு ஒபாமா மகள்

நியூயோர்க், ஜன.22

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஒபாமாவின் மகள் மாலியா தனது பிரிட்டிஷ் காதலனுடன் நியூயோர்க் நகரில் அமர்ந்து பேசிக்கொண்டிருக்கும் புகைப்படம் தற்போது வைரலாகியுள்ளது.

ஒபாமாவின் மூத்த மகள் மாலியா தற்போது ஹவார்ட் பல்கலைக்கழத்தில் படித்து வருகிறார். இவர் தனது பிரிட்டிஷ் காதலனை கேம்பிரிட்ஜில் அண்மையில் சந்தித்துள்ளார். இவர்கள் இருவரும் காதலர்கள் என்பது கடந்த ஆண்டு நவம்பர் மாதம் வெளி உலகத்துக்குத் தெரிய வந்தது. அப்போது, மாலியா தனது காதலனை முத்தமிட்ட காட்சி வைரலானது. தற்போது, இவர்கள் இருவரும் நியூயோர்க் நகரில் அமர்ந்து மிகவும் சாதாரணமாக பேசிக்கொண்டிருக்கும் புகைப்படம் வெளியாகியுள்ளது. அந்தப் புகைப்படத்தில், மாலியா தனது காதலனைப் பார்த்து சிரித்தபடி இருக்கிறார்.(அ)



# அமெரிக்கா 'ஷட்டவுன்'

வோஷிங்டன், ஜன.22

அமெரிக்க அரசின் வரவு செலவுத் திட்டத்துக்கு நாடாளுமன்றத்தில் ஒப்புதல் கிடைக்காததையடுத்து, அங்கு "ஷட்டவுன்" நிகழ்வு அதிகாரபூர்வமாகத் தொடங்கியுள்ளது.

ஷட்டவுன் நிகழ்வு என்பது, அமெரிக்க மத்திய அரசுக்கு கட்டுப்பட்ட சேவைகள் அனைத்துக்கும் ஊதியம் அளிக்க பணம்இல்லாமல்நிறுத்திவைக்கப்படும். அத்தியாவசிய பணிகளாக பொலிஸ், இராணுவம் தவிர அனைத்தும் முடங்கும்.

வரவு-செலவுத் திட்டத்தை நிறைவேற்ற ஜனநாயகக் கட்சி உறுப்பினர்களுடன், அமெரிக்க அரசு நடத்திய சமரசப் பேச்சு தோல்வியில் முடிந்ததையடுத்து, இந்த 'ஷட்டவுன்' தொடங்கியுள்ளது. கடந்த 2013 ஆம் ஆண்டுக்கு பின் இப்போது மீண்டும் 'ஷட்டவுன்' தொடங்குகிறது.(அ)

# 20 எம்.எல்.ஏக்கள் பதவி நீக்கம்

புதுடெல்லி, ஜன.22

இரட்டை பதவி வகித்தது தொடர்பான குற்றச்சாட்டில் சிக்கிய ஆம் ஆத்மி கட்சியைச் சேர்ந்த 20 எம்.எல்.ஏ.க்களை தகுதி நீக்கம் செய்யக் கோரி தேர்தல் ஆணையம் அளித்த பரிந்துரைக்கு குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் நேற்று ஒப்புதல் அளித்தார்.

இதையடுத்து, ஆம் ஆத்மி கட்சி எம்.எல். ஏக்கள் 20 பேர் தகுதி இழந்துள்ளனர் விரைவில் 20 தொகுதிகளுக்கும் இடைத்தேர்தல் அறிவிக்கப்படலாம்.

டெல்லியில் ஆம் ஆத்மி தலைமையிலான ஆட்சி நடந்து வருகிறது. இந்தக் கட்சியைச் சேர்ந்த 20 எம்.எல்.ஏக்களை நாடாளுமன்ற செயலாளர்களாக முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவால் நியமித்தார். இது அமைச்சருக்கு இணையான பதவியாகும்.

ஆனால், ஆம் ஆத்மி கட்சியைச் சேர்ந்த இந்த 20 எம்.எல்.ஏ.க்களும் இரட்டை பதவி வகிப்பதாக காங்கிரஸ், பா.ஜ.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டின.

இந்நிலையில், ஆம் ஆத்மி கட்சியின் எம்.எல்.ஏக்கள் 20 பேரைத் தகுதிநீக்கம் செய்யலாம் என தேர்தல் ஆணையம் பரிந்துரை செய்ததற்கு குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் நேற்று ஒப்புதல் அளித்துள்ளார் என குடியரசுத் தலைவரின் செய்தித் தொடர்பாளர் அதிகாரபூர்வமாகத் தெரிவித்துள்ளார்.

இந்த 20 எம்.எல்.ஏக்கள் நீக்கத்தால் ஆம் ஆத்மி கட்சிக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படப்போவதில்லை. டெல்லி சட்ட சபையில் மொத்தம் உள்ள 70 உறுப்பினர்களில் 66 எம்.எல்.ஏக்கள் ஆம் ஆத்மி கட்சிக்கு இருக்கிறார்கள். 20 பேர் தகுதி நீக்கம் செய்யப்பட்டால் கூட, 46 எம்.எல்.ஏக்கள் இருப்பதால், ஆட்சிக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லை. (அ)

# சீனாவுக்குள் அத்துமீறிய அமெரிக்கப் போர்க்கப்பல்

பீஜிங், ஜன.22

அமெரிக்கப் போர் கப்பல் ஒன்று சீனக்கடற் பிராந்தியத்தில் அனுமதியின்றி நுழைந்ததாக அந்த நாட்டு அரசு குற்றம்சாட்டியுள்ளது.

"கடந்த ஜனவரி 1 ஆம் திகதி அமெரிக்கப் போர்க் கப்பல் ஒன்று எங்கள் பிராந்தியத்துக்குட்பட்ட ஹூவாங்யன் பகுதியில் அனுமதி இல்லாமல் நுழைந்துள்ளது. இது தொடர்பாக விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்" என்று சீன அரசால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹூவுாங்யன் தீவு, ஸ்கார்பாரோ ஷோல் என்றும் அழைக்கப்படுகிறது. தென்சீனக் கடலில் உள்ள இந்தப்பிரதேசம் பிலிப்பைன்ஸ் மற்றும் சீனாவால் உரிமை கோரப்பட்டு வரும் சர்ச்சைக்குரிய பிரதேசமாகும்.

கடந்த ஆண்டு மே மாதம் தென் சீனக் கடலில் அமெரிக்கப் போர்ப் கப்பல் ஒன்று



நுழைந்ததாக சீனா குற்றம் சாட்டியிருந்தது. இந்த நிலையில் மீண்டும் சீனாவின் எல்லைப் புறத்தில் அமெரிக்கப் போர்க்கப்பல் நுழைந்துள்ளது. (அ)

# கெர்பரிடம் வீழ்ந்தார் ஷரபோவா



மெல்போர்ன், ஜன. 22

அவுஸ்ரேலிய ஓபன் டென்னிஸில் முன்னாள் சம்பியன் ஷரபோவா கெர்பரிடம் வீழ்ந்தார்.

'கிராண்ட்ஸ்லாம்' அந்தஸ்துப் பெற்ற அவுஸ்ரேலிய ஓபன் டென்னிஸ் திருவிழா மெல்பேர்ணில் நடந்து வருகிறது.

இதில், நேற்றுமுன்தினம் நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் பிரிவில் பலத்த எதிர்பார்ப்புக்கு மத்தியில் நடந்த முன்னாள் முதல் நிலை மங்கை களான ஏஞ்சலிக் கெர்பர் (ஜேர்மனி)- மரியா ஷரபோவா (ரஷ்யா) இடையிலான ஆட்டம் உப்புச் சப்பின்றி ஒரு தரப்பாக அமைந்தது ரசிகர்களுக்கு ஏமாற்றத்தை அளித்தது.

இதில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய 2016ஆம் ஆண்டு சம்பியனான கெர்பர் 6-1, 6-3 என்ற புள்ளிக் கணக்கில் ஷரபோவாவை 64 நிமிடங்களில் அடக்கினார்.

இதேவேளை, நேற்று நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் சுவாரேஸ் நவரோ மற்றும் எஸ்தோனியாவின் ஆனெட் கொண்டா வெய்ட் ஆகியோர் விளையாடினர்.

இதில், நவரோ 4-6, 6-4, 8-6 என்ற புள்ளிக் கணக்கில் வெற்றி பெற்று காலி றுதிச் சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளார்.

மற்றொரு ஆட்டத்தில் ஸ்லோவோக்கியாவின் ரிபாரிகோவாவை, டென்மார்க்கின் கரோலின் வொஸ்னியாக்கி 6-3, 6-0 என்ற கணக்கில் வீழ்த்தினார். (ஐ)



# இலங்கை பதிலடி!

டாக்கா, ஜன. 22

சிம்பாப்வேக்கு எதிராக நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் இலங்கை அணி 5 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி, 44 ஓவர்களில் 198 ஓட்டங்களுள் சுருண்டது.

அந்த அணி சார்பாக துடுப்பாட்டத்தில், ஆகக்கூடுதலாக ரெய்லர் 58 ஓட்டங்களைச் சேர்த்தார்.

இலங்கையின் பந்துவீச்சில் திசார பெரோ 4 விக்கெட்டுகளையும், பெர்னாண்டோ 3 விக்கெட்டுகளையும், சண்டகன் 2 விக்கெட்டுகளையும் சாய்த்தனர்.

பின்னர் 199 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கிக் களமிறங்கிய இலங்கை அணி, 44.5 ஆவது ஓவரில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 202 ஓட்டங்களைச் சேர்த்து, 5 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

இலங்கை அணி சார்பாக துடுப்பட்டத்தில் குசல் பெரேரா (49), மென்டிஸ் (36), சண்டிமால் (38 ஆட்டமிழக்காமல்), திசார பெரேரா (39 ஆட்டமிழக்காமல்) சிறப்பாக ஆடி ஓட்டங்களைச் சேர்த்திருந்தனர்.

இந்தப் போட்டியில் வெற்றிபெற்றதன் மூலம் ஏற்கனவே வாங்கிய அடிக்கு இலங்கை அணி பதிலடி கொடுத்துள்ளது.

ஆட்டநாயகனாக திசார பெரேரா தெரிவு செய்யப்பட்டார். (ஐ)

# டெஸ்டில் விட்டதை 50 ஓவரில் பிடித்தது

மெல்பேர்ண், ஜன. 22

அவுஸ்ரேலியாவுக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் போட்டியிலும் வெற்றிபெற்றதன் மூலம் இங்கிலாந்து அணி, தொடரைத் தன்வசப்படுத்தியது.

இங்கிலாந்து - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையில் 5 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடர் நடைபெற்றுவருகிறது.

இதில் ஏற்கனவே நடைபெற்று முடிந்த 2 போட்டிகளில் இங்கிலாந்து வெற்றிபெற்றது.

இந்நிலையில், மூன்றாவது போட்டி நேற்று நடைபெற்றது.

இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி, பட்லெரின் சதத்தின் (100 ஆட்டமிழக்காமல்) உதவியுடன் 50 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 302 ஓட்டங்களைச் சேர்த்தது.

பட்லர் தவிர ஏனைய வீரர்களுள், பைர்ஸ்ரோவ் (39), வோக்கர்ஸ் (53 ஆட்டமிழக்காமல்) ஆகியோரும் சிறப்பாக ஆடி ஓட்டங்களைச் சேர்த்தனர்.

பின்னர் 303 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கிக் களமிறங்கிய அவுஸ்ரேலிய அணி, பின்ஞ் (62), மார்ஸ் (55), ஸ்ரோனிஸ் (56) ஆகியோர் அரைச்சதங்களை அடித்தபோதும், 50 ஓவர்கள் நிறைவில் இலக்கை எட்ட முடியாமல் 286 ஓட்டங்களையே சேர்த்தது.

இதன் மூலம் அந்த அணி 16 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

இந்தப் போட்டியிலும் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி, தொடரை 3:0 என்ற கணக்கில் தன்வசப்படுத்தியது. இரு அணிகளுக்குமிடையில் இன்னும் இரு போட்டிகள் நடைபெறவுள்ளன.

இந்த ஆட்டத்தின் நாயகனாக இங்கிலாந்தின் பட்லர் தெரிவுசெய்யப்பட்டார்.

இரு அணிகளும் மோதிய டெஸ்ட் தொடரில் கண்ட தோல்விக்கு ஒருநாள் தொடரைக் கைப்பற்றியதன் மூலம் ஆறுதலடைந்துள்ளது இங்கிலாந்து. (ஐ)






இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 22.01.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.